**BEFORE THE II ADDITIONAL LABOUR COURT AT CHENNAI**

**DEPOSITION OF WITNESS**

---

**Case No. : O.P.226/2024** **Date : 14.08.2025**

Deposition of : WW1

Name : Mr.N. Hari Venkatakrishnan

Age : 56 years

Father's Name : Mr.N.Narayana Prasad

Address :

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).**

---

**குறுக்கு விசாரணை:**

1. முதல் விசாரணை வாக்குமூலம் ஆங்கிலத்தில் உள்ளது. அதில் உள்ள முக்கால்வாசி சங்கதிகள் எனக்கு தெரியாது. ஏனெனில் எனக்கு ஆங்கிலம் ஓரளவுக்குத்தான் தெரியும். கோரிக்கை மனுவில் உள்ள சங்கதிகளும் எனக்கு முக்கால்வாசி தெரியாது. வேலைநீக்கத்தை எதிர்த்துதான் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1994 ல் நான் பணியில் சேர்ந்தேன். உள்விசாரணை நியாயமானதா இல்லையா என்பதுதான் தற்போதைய விசாரணை. பிரமாண வாக்குமூலம் உள்விசாரணை நியாயமானதா இல்லையா என்பதை பற்றி மட்டும்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. 11 ஆவணங்கள் வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆவணத்தில் உள்ள சங்கதிகள் ஓரளவுக்கு எனக்கு தெரியும். என்ன காரணத்திற்காக நான் பணிநீக்கம் செய்யப்பட்டேன் என்ற காரணம் எனக்கு தெரியும். நான் லஞ்சம் கேட்டதாக பணிநீக்கம் செய்யப்பட்டேன். நான் எழுத்தராக பணிபுரிந்தேன். எனக்கு Senior Executive என்ற பதவி வழங்கப்பட்டுள்ளது. அது Ex.W2 லும் சொல்லப்பட்டுள்ளது. 20.01.2023 அன்று ருத்ரநாராயணன் எனக்கு ஒரு e-mail அனுப்பினார் என்றால் சரியல்ல.

3. நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கக்கூடாது என்று எனக்கு நன்றாக தெரியும். Ex.W3 தான் எனக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு நான் வழங்கிய பதிலாகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி ஆவணத்தில் *"Mr.Rudra Narayanan was deputed to assist me from January 2023 for the purpose of verifying employee's travel expense sheets (APC division), which were submitted by them on completion of travel, which in turn will be verified by me to ensure the bills are in compliance with the company's travel policy."* என்று நான்

சொல்லியுள்ளேன்.

4. அதே ஆவணத்தில் *"In case if the employee attached duplicate bills, instead of originals, it will be processed only after obtaining the approval of the Head of Department and General Manager of Finance."* என்று சொல்லியுள்ளேன். நான் சென்னை பல்கலைக்கழகத்தில் B.A.பொருளாதாரம் படித்துள்ளேன். மேற்படி அதே ஆவணத்தில் " I requested him for a loan of Rs.5,000/-, என்று சொல்லியுள்ளேன். Ex.W4 ன் படி திரு. ஹரிஹரன் என்ற வழக்கறிஞர் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது எனக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. விசாரணை அதிகாரி எனக்கு நேரடியாக தெரியாது. அவரை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அவர் APC நிறுவனத்தில் staff ஆக இருந்தார் என்று எனக்க சொன்னார்கள். பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 6ல் அவரைப்பற்றி நான் சொல்லியுள்ள சங்கதிகள் எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் Management சார்பாக சில வழக்குகளுக்குக்காக நான் அவரை சந்தித்திருக்கிறேன். அவருடன் சென்றிருக்கிறேன். ஹரிஹரன்

விசாரணை அதிகாரியாக இருப்பதற்கு நான் எவ்வித ஆட்சேபனையும் தெரிவித்து எந்த கடிதமும் எழுதவில்லை.

6. உள்விசாரணையின்போது நிர்வாகம் 18 ஆவணங்களை தாக்கல் செய்தது என்றால் சரிதான். நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் 4,5 ஆவணங்கள் தாக்கல் செய்தேன். அந்த 18 ஆவணங்களின் நகல்களும் எனக்கு வழங்கப்பட்டன. அந்த 18 ஆவணங்களையும் தற்போது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் உள்நோக்கத்துடன்தான் உள்விசாரணையில் தாக்கல் செய்யப்பட்ட 18 ஆவணங்களையும் இங்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. நிர்வாகத்தரப்பில் ருத்ரநாராயணன் மற்றும் ரேவதி ஆகியோர்களை சாட்சிகளாக விசாரித்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரையும் நான் குறுக்கு விசாரணை செய்தேன் என்றால் சரியல்ல. **(சாட்சி தற்போது பின்வருமாறு கூறுகிறார்)** மேற்படி இரண்டு நிர்வாக சாட்சிகளையும் உள்விசாரணையின்போது நான் குறுக்கு விசாரணை

செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் மூலப்படியிலிருந்து எடுக்கப்பட்ட நகல்கள்தான் என்று சான்று அளித்துள்ளேன். அந்த மூலப்படிகள்(originals)என்னிடம் உள்ளன. அவற்றை இங்கு என்னால் தாக்கல் செய்ய முடியும். என்னிடம் காட்டப்படும் Enquiry proceedings அனைத்தின் அடிப்பகுதியிலும் காணப்படும் கையொப்பங்கள் என்னுடையவைதான்.**(Enquiry proceedings (32 தாள்கள்) Ex.M1 series ஆக குறியீடு செய்யப்படுகின்றன.)**

8. நான் தாக்கல் செய்துள்ள enquiry proceedings ஆவணங்களில் அதனை பெற்றுக்கொண்டதற்கு ஆதாரமாக அதன் அடிப்பகுதியில் நான் இட்டிருந்த கையொப்பங்களை மறைத்து நகல் எடுத்து அந்த புனையப்பட்ட ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தை ஏமாற்றி மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உள்விசாரணையின்போது தாக்கல் செய்யப்பட்டு நான் நகல் பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தான் என்னிடம் காட்டப்படுபவை என்றால் சரிதான். **(உள்விசாரணையின்போது குறியீடு செய்யப்பட்ட 18 ஆவணங்களும் தற்போது Ex.M2series(49 தாள்கள்)ஆக குறியீடு**

**செய்யப்படுகின்றன**)

வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.